காலை முரசு

பக்கங்கள் 17

## ஈழத்தின் புரட்சிக் கவிஞர் பரந்தாமன் காலமானார்



ஈழத்தின் புரட்சிப் பாடல்கள் பலவற்றை எழுதிய பண்டிதர் வீர கத்திப்பிள்ளை பரந் தாமன் 04

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை 15.06.2025 | அதிர்வு 315




# அதிகாரத்துக்காகத் துரோகிகளுடன் கூட்டுச் சேர்வது சாக்கடை அரசியல்!

## தமிழரசுக் கட்சியை விளாசித் தள்ளிய அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்


"தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கப்பட்ட - துரோகி என முத்திரை குத்தப்பட்ட தரப்புடன், அதிகாரத்துக்காகக் கூட்டுச் சேர்வது சாக்கடை அரசியலாகும். அப்படியான அரசியலை முன்னெடுக்கும் தரப்பின் முகத்திரை தற்போது கிழிந்துவிட்டது."

- இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். சாவகச்சேரியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:- 03

## 240 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 240 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். 04

## வடக்கு பொலிஸ் நிலையங்கள் தாக்கப்படும்: அநாமதேய அழைப்பு பற்றி தீவிர விசாரணை

வடக்கு மாகாணத்தில் உள்ள 10 பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு ஓர் அநாமதேய தொலைபேசி அழைப்பு வந்தது எனக் கூறப்படுகின்றது.

கடந்த 11ஆம் திகதி மதியம் 1.15 மணி முதல் 1.20 மணிக்குள் இந்த



அழைப்பு வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04




யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தவிசாளர்கள், நகர பிதாக்கள், மேயர்கள் போன்றோரைத் தெரிவு செய்வதில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி (சங்குக் கூட்டணி) என்ன நிலைப்பாட்டை எடுக்கின்றதோ அதே நிலைப்பாடுதான் பதிலாக வன்னி மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் தமிழரசால் முன்னெடுக்கப்படும் என ரெலோவின் தலைவர்களிடம் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர்களான சி.வி.கே.சிவஞானமும் சுமந்திரனும் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்து இருந்தனர்.

யாழ். மாவட்டத்தில் யாழ் மாநகர சபை உட்பட இதுவரை நடந்த உள்ளூராட்சி சபை தலைவர் தெரிவுகளின் போது தமிழரசுக் கட்சிக்குப் போட்டியாக – எதிராக – ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# சங்குடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு தனித்துப் பேச்சு நடத்துகின்றார் குகதாசன்

## கட்சித் தலைமையை ஓரம் கட்டித் திருமலையில் அவர் தனி ஆவர்த்தனம்

(எஸ்.கீதபொன்கலன்)

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன்(சங்கு) திருகோணமலை உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் நாம் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றோம்,ஆனால் இதுவரை இறுதி முடிவேதும் ஏற்படவில்லை என்று நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக்குத் தெரியாமல் தம்பாட்டில் பிற கட்சி ஒன்றுடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பான ஏற்பாட்டிலும் பேச்சுகளிலும் கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவர் குகதாசன் ஈடுபட்டிருப்பது கட்சிக்குள் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தியிருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சண்முகம் குகதாசன் மேலும் கூறியவை வருமாறு:-

சங்கு கட்சி அதாவது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திருகோணமலை மாநகர சபையில் தமக்கு துணை மாநகர முதல்வர் பதவி தரவேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். தரலாம் என்று கூறியிருந்தோம்.

பட்டணமும் சூழலும் பிரதேச சபையில் இரண்டு ஆண்டுக்கு தவிசாளர் பதவி தரவேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். தரலாம் எனக் கூறியிருந்தோம்.

மூதூர் பிரதேச சபையில் இரண்டு ஆண்டுக்கு துணைத் தவிசாளர் பதவி தரவேண்டும் எனக் கேட்டிருந்தார்கள். அதுவும் தரலாம் எனக் கூறியிருந்தோம்.

மேற்படி விடயங்களை இறுதியாக ஜூன் 05 ஆம் திகதி




நாடாளுமன்றத்தில் வைத்து செல்வம் அடைக்கலநாதன் அவர்களிடமும் கூறியிருந்தேன்.

அவர் என்னை ஜூன் 08 ஆம் திகதி திருகோணமலையில் சந்திப்பார் எனக் கூறியிருந்தார். எனினும் அவர் சந்திக்கவில்லை. பலமுறை நான் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். பதிலேதும் இல்லை. வேலைப்பளுவாக இருக்கலாம். எனினும், விரைவில் அவர் என்னுடன் தொடர்பு கொள்வார் என்று நம்புகின்றேன். - என்று கூறியுள்ளார்.

# மன்னார் பள்ளிமுனையில் கடற்படை ஆக்கிரமித்துள்ள மக்களின் காணிகள் மக்களிடமே வழங்கப்பட வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து




(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் நிரந்தரமாக அபகரிக்கப்படுவதை ஒரு போதும் நாம் அனுமதிக்க போவதில்லை என ரெலோ தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் அவரது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வந்ததன் பின்னர் முப்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதாகத் தெரிவித்து இருந்தார் . இருந்த போதிலும் பல இடங்களில் அது நடைபெறவில்லை.

இதேவேளை மன்னார் பள்ளிமுனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் அமைக்கப் பட்டுள்ள தனியார் காணிகள் குறித்து நாங்கள் நாடாளுமன்றத்தில் பேசி இருந்தோம்.

ஜனாதிபதிக்கும் இது தொடர்பாக கடிதங்கள் அனுப்பி இருந்தோம். ஆனால் தற்போது இந்த கடற்படை முகாம் அமைந்திருக்கும் காணிகளை வருகின்ற 20 ஆம் திகதி அளவீடு செய்யப் போவதாக துண்டு பிரசுரம் ஒட்டப்பட்டு இருக்கிறது.

எனவே நாங்கள் அதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. மக்கள் இதற்கு எதிராக நிச்சயம் போராடுவார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு இது சம்பந்தமாக நாங்கள் ஜனாதிபதிக்கும் தெரிவிக்க இருக்கிறோம்.

அதேபோன்று அபிவிருத்திக் குழுத் தலைவருக்கும் நாங்கள் இது சம்பந்தமான முறைப்பாடு செய்ய இருக்கிறோம். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்தோடு பள்ளிமுனை மக்களின் காணிகளை அவர்களிடமே பகிர்ந்தளிக்க வேண்டும்.

கடற்படை அதை அபகரிக்கும் செயல்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். மக்கள் போராட்டம் வெடிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்பது எங்களுடைய கோரிக்கையாக உள்ளது.

எனவே ஜனாதிபதியிடம் இந்த செயற்பாட்டை நிறுத்துமாறு வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் நாங்கள் பேச இருக்கிறோம். - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

களமிறங்கி இருந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் சேர்ந்து தமிழரசுக்கு எதிரான நிலைப்பாட்டை சங்குக் கூட்டணி முன்னெடுத்திருந்தது.

இந்த நிலையில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா மாநகர சபையின் முதலாவது மேயரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற இருக்கின்றது.

இதில் சங்கு கூட்டணி நிறுத்தும் வேட்பாளரை தமிழரசு ஆதரிக்காமல் விட்டால், மாநகர மேயர் பதவி எதிரணிக்கு – பெரும்பாலும் தேசிய மக்கள் சக்திக்கு – போகக் கூடிய ஆபத்து உண்டு. இந்தக் காரணத்தினால் சங்கு கூட்டணியுடன் என்ன முரண்பாடு இருந்தாலும், அதை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு, சங்குக் கூட்டணியின் வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டை தமிழரசு எடுக்கக் கூடும் எனத் தெரிகிறது.

இது தொடர்பில் தமிழரசு கட்சியின் தலைவர்களான சி.வி.கே.சிவஞானம், சுமந்திரன் ஆகியோர் குறிப்பிட்ட முன்னைய நிலைப்பாட்டை சற்று தளர்த்தி, விட்டுக் கொடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக, இந்த விடயத்தை கையாளும் பொறுப்பை கட்சியின் வவுனியா மாவட்ட கிளைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினரான சத்தியலிங்கத்திடம் கையளித்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் தங்களின் இறுக்கமான நிலைப்பாட்டில் இருந்து தளர்ந்து, விட்டு கொடுக்கும் விதத்தில் சத்தியலிங்கம் முடிவெடுக்க, இவ்விடயத்தை நாசூக்காக அவரிடம் கையளித்திருக்கின்றது கட்சித் தலைமை.

ஆனால், திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரை அதன் மாவட்டக் கிளை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தாம் தனிக் கட்சித் தலைவர் போல, கட்சித் தலைமையை மீறித் தம்பாட்டில் தனி ஆவர்த்தனம் வாசிக்கின்றார்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தைத் தன் தனி ஜமீனாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வைத்திருந்தாலும், அந்த மாவட்டத்தில் தமிழரசு கட்சியின் பொதுவான நிலைப்பாட்டை எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காமல், அவர் தனித்துவமாகக் கட்சியைக் கொண்டு செல்கின்றார். அதனால் கிளிநொச்சி மாவட்டத்தை அவரது கட்டுப்பாட்டோடு தொடர்ந்து கொண்டு நடத்துவதில் கட்சி தலைமைக்கு பெரிய நெருக்கடி எதுவும் இல்லை எனக் கூறப்படுகிறது.

ஆனால் திருகோணமலையில் அதே போன்று தனி ஜமீன் பாங்கில் தன்னை சிற்றரசராக மாற்றி குகதாசன் முன்னெடுக்கும் நடவடிக்கைகளினால் கட்சியும் தலைமையும் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் தெரிவு தொடர்பில் குகதாசனின் நடவடிக்கைகளினால் பெரும் குழப்பங்கள் விளைந்திருப்பது அப்பட்டமாகி இருக்கிறது.

வேட்பாளர் நியமனப் பத்திரங்களில் கட்சியின் செயலாளர் ஒப்பமிட்டதோடு விடயங்கள் முடிந்து விட்டன, இனி விவகாரம் தன் கையில் என்று குகதாசன் தனி ராஜாவாக செயற்படப் புறப்பட்டிருப்பதனால் இப்போது நெருக்கடி முற்றியிருக்கின்றது.

திருகோணமலை நகரமும் சுற்றாடலும் பிரதேச சபை தலைவர் பதவிக்கு கட்சி தலைமை ஒருவரை தேர்வு செய்து அறிவிக்க, குகதாசன் தம்முடைய பாட்டில் ஏற்கனவே தெரிவான உறுப்பினர்களிடையே தேர்தல் என்ற பெயரில் தமக்கு விருப்பமான ஐவரை வைத்துக் கொண்டு, ஒருவரை அறிவித்திருக்கிறார். இதற்கிடையில் கட்சி தலைமை தாம் குறிப்பிட்ட உறுப்பினரை பிரதேச சபையின் தலைவராகப் பிரேரிக்கவும் அவருக்கு வாக்களிக்கவும் வலியுறுத்தி செயலாளரின் ஒப்பத்துடன், சபைக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்களை அனுப்பி இருக்கின்றது. அந்தக் கடித வழிகாட்டலை மீறி குகதாசன் கைகாட்டும் இன்னொருவருக்கு கட்சி உறுப்பினர்கள் வாக்களித்தார்கள் என்றால் அவர்கள் மீது கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை பாயவும், அவர்கள் அதனால் பிரதேச சபை உறுப்பினர் பதவிகளை இழக்கவும் நேரிடலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் கட்சியின் தலைமைக்கும் குகதாசனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை பயன்படுத்தி பிற தரப்புகள் இடையில் புகுந்து விளையாடும் ஏது நிலையும் தென்படுகின்றன. இதற்கிடையில் கட்சி தலைமை சங்கு கூட்டணி உட்பட்ட தரப்புகளுடன் முரண்பட்ட நிலைப்பாட்டோடு பேச்சுக்களில் ஈடுபட, அதற்குத் தலைகீழான நிலைப்பாட்டோடு குகதாசன் அதே தரப்புகளோடு இணைந்து செயல்பட முன்னிற்பதும் கட்சி தலைமைக்கு நெருக்கடியை தந்திருக்கின்றது. இதே வேலையை கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயமும் சங்கோடு சேர்ந்து செய்தவர் குகதாசன் என்பது பகிரங்கமான விவகாரம்தான்.

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துக்கு அதன் மட்டக்களப்பு தளபதியாக இருந்து கொண்டு கருணா ஆப்படித்தமை போன்ற வேலையை தமிழரசுக்கு திருகோணமலையிலிருந்து கொண்டு குகதாசன் செய்கிறார் எனக்கட்சி வட்டாரங்கள் சீறுகின்றன.

இன்று பிறக்கும் புதிய வாரத்தில் தமிழரசுக்குள் திருகோணமலையின் நெருக்கடி பெரிய பூகம்பமாக வெளிப்படும் சூழல்கள் தென்படுகின்றன.

கட்சியின் தலைமைக்கு முரண்பட்டு குகதாசன் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க முடியாது என்று கூறும் திருகோணமலை மாநகர சபைக்கு தெரிவான ஒரிரு உறுப்பினர்கள் வரும் 23ஆம் திகதி மாநகர சபையின் முதல் கூட்டத்துக்கு சமூகம் தராமல் விட்டு, கட்சியை காலைவரக்கூடிய ஆபத்துக் கூட உண்டு. கட்சித் தலைமைக்கு ஆப்படிப்பதற்காக குகதாசன் சங்கு கூட்டணியோடு தனி ஆவர்த்தனக் கச்சேரி நடத்த முற்படுகின்றார். அந்த முரண்பாட்டில் இடையே புகுந்து விளையாடி, தமிழரசுத் தலைமைக்கு 'பாடம் படிப்பிக்க' சங்கும் முனைப்பாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்த சூழ்ச்சி விளையாட்டுக்களின் அடுத்த கட்ட நகர்வுகளை இந்த வாரத்தில் நாங்கள் அறியக்கூடியதாக இருக்கும் என நினைக்கிறேன்.

எது, எப்படி என்றாலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் விடயத்தில் கட்சிச் செயலாளரின் ஒப்பந்தான் பல விடயங்களைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும். வேட்பு மனுவில் கட்சி செயலாளரின் ஒப்பத்தை பெற்ற பின்னர் அவரின் ஆட்டம் முடிந்தது என்று குகதாசன் கருதுகிறார் போலும். ஆனாலும் விவகாரம் அப்படி அடங்கி விடாது என்று தோன்றுகின்றது. இடையில் சிக்குப்படும் கட்சியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள்தான் பாவம்...!

## அதிகாரத்துக்காக...

"நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கிலும் இதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. தெற்கில் கடைப்பிடித்த அணுகுமுறையை நாம் வடக்கு, கிழக்கில் கடைப்பிடிக்கவில்லை. இங்கு நடுநிலை வகித்தோம்.

நாம் வாக்கெடுப்பில் பங்கேற்றிருந்தால் இங்குள்ள தமிழ்க் கட்சிகளின் கனவு சிதைக்கப்படும். மனக்கோட்டை, மண்கோட்டையாக மாறிவிடும் என்பதைச் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

இங்கு யார் ஆட்சி செய்தாலும் அந்த ஆட்சிக்கு நாம் உதவியாக இருப்போம். ஏனெனில் மக்களுக்குச் சேவை செய்வதே எமது முதன்மை நோக்கமாகும். உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்களுக்குக் கிடைக்கப் பெறும் சேவைகள் சரியாகச் சென்றடைய வேண்டும். அதற்காக எமது உறுப்பினர்கள் தீவிரமாகச் செயற்படுவார்கள்.

அதேபோல் ஊழல், மோசடிகள் இடம்பெறும் பட்சத்தில் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கும் எமது உறுப்பினர்கள் செயற்படுவார்கள். மக்களை ஏமாற்றும் அரசியலை நாம் முன்னெடுக்கவில்லை. சாக்கடை அரசியல் செய்யவும் தயாரில்லை. அவ்வாறு செய்ய நினைத்திருந்தால் யாழ். மாநகர சபையில் இன்று வேறொரு நபரே மேயராக வந்திருக்கக்கூடும்.

கடந்த காலங்கள் முழுவதும் தமிழ்த் தேசியப் பரப்பில் இருந்து ஓரங்கட்டப்பட்ட – துரோகிகள் என முத்திரை குத்தப்பட்ட – ராஜபக்ஷக்களின் காலை நக்கிப் பிழைக்கின்றவர் எனக் கூறப்பட்ட – மக்களுக்கு எதிராக அராஜாங்களைக் கட்டவிழ்த்துவிட்டவர் – ஊடகவியலாளர்களைக் கொன்றவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் கூட்டுச் சேரும் நிலைமை காணப்படுகின்றது. இதனை மக்களும் இன்று புரிந்துகொண்டுள்ளனர்.

மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அல்ல, தமது காவாலித்தனமான அரசியலை தக்கவைத்துக் கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு ஆட்சியமைக்கின்றனர்.

இப்படியானவர்கள்தான் தேசிய மக்கள் சக்தியை இனவாதகக் கட்சி எனவும், வாக்களிக்க வேண்டாம் எனவும் பிரசாரம் செய்தனர். ஆனால், அவர்கள் யாரென்பது தற்போது அம்பலமாகியுள்ளது.

அதேபோல் தெற்கிலும் கூட்டுக் களவாணிகள் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கின்றனர். கடந்த காலங்களில் ஒருவரையொருவர் எப்படி விமர்சித்துக் கொண்டனர். ஆனால், வெட்கம் இல்லாமல் – அதிகாரத்துக்காக – கொள்கை துறந்து கூட்டுச் சேர்கின்றனர்." – என்றார்.

# கைது செய்வோம் என மிரட்டி என் குரலை ஒடுக்க முடியாது!

## முன்னாள் அமைச்சர் கம்மன்பில ஆவேசம்



"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது ஜேர்மன் விஜயத்தின் போது விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர் நெடியவன் என்பவரைச் சந்திக்கவுள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியிருப்பதாக நான் தெரிவித்திருந்தேன். அதனை அடிப்படையாக்கொண்டு நான் இனவாதத்தைத் தூண்டுவதாகக் குறிப்பிட்டு என்னைக் கைது செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. சிறையில் அடைப்பதாகக் கூறியோ, சுட்டுக் கொல்வோம் எனக் கூறியோ என்னை அச்சுறுத்தி என் குரலை ஒடுக்க முடியாது."

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஜே.வி.பி.யின் செயற்பாட்டாளர்களே என்னைக் கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசின் பல்வேறு தவறுகளை நான் ஆதாரத்துடன் நாட்டுக்கு வெளிப்படுத்துவதால்தான் என்னைக் கைது செய்வதற்குத் தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நான் இனவாதத்தைத் தூண்ட முயற்சித்ததாகக் குறிப்பிட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சட்டத்தின் கீழ் என்னைக் கைது செய்ய அரசு திட்டமிட்டு வருகின்றது.

இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் நீண்ட காலம் பிணை இன்றி என்னை விளக்கமறியலில் வைக்க முடியும் என்பதே அரசின் திட்டமிடல் ஆகும்.

அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவே எனக்கு எதிராக இரண்டு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் என்னிடம் வாக்குமூலம் பெற்று அதன் பின்னர் கைது செய்வதே இதன் நோக்கமாகும்.

ஆனால், அரசின் திட்டத்துக்கமைய என்னைக் கைது செய்ய முடியாது. காரணம் என் மீது அவ்வாறு எந்தக் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை.

நான் எந்த வகையில் இனவாதத்தைத் தூண்டியிருக்கின்றேன் என்பதை இவர்கள் முதலில் தெளிவுபடுத்த வேண்டும். கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்ததாக நான் கூறியதாகத் தெரிவித்தனர்.

ஆனால், இது தொடர்பில் சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்சீவவினால்தான் முதன் முதலில் சந்தேகம் வெளியிடப்பட்டது.

என்னை எவ்வாறு கைது செய்வது என்பது குறித்து சிந்திப்பதை விடுத்து, வெளியாகியுள்ள செய்திகள் குறித்து உண்மையை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அரசு திட்டமிடுவதைப் போன்று என்னை ஒருபோதும் கைது செய்ய முடியாது. நான் ஒரு சட்டத்தரணி என்பதால் மிகுந்த அவதானத்துடன் சொற்களை அல்லது வசனங்களைப் பிரயோகிப்பேன்.

பிள்ளையானைப் போன்று என்னையும் சட்டத்துக்கு விரோதமாகக் கைது செய்து, மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்துவதைத் தடுத்து வைப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கக் கூடும்.

உதய கம்மன்பிலவைச் சிறையில் அடைப்பதாகவோ – சுட்டுக்கொல்வதாகவோ கூறி மிரட்ட முடியாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெளிவாகக் கூறிக் கொள்கின்றேன்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 240 கிலோ...

பொன்னாலைப் பகுதியில் உள்ள பற்றைக்காடொன்றினுள் கஞ்சாப் பொதிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்துக்கு விரைந்தவர்கள், பொதிகளை எடுக்க வருபவரைக் கைது செய்யும் நோக்குடன் நீண்ட நேரமாகப் பற்றைக்காட்டினுள் பதுங்கி இருந்துள்ளனர்.

பொலிஸார் பதுங்கி இருப்பதனை அறியாது, கஞ்சாப் பொதிகளை எடுக்கச் சென்ற இளைஞரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மேற்படி இளைஞர் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட நபர், மீட்கப்பட்ட கேரள கஞ்சாப் பொதிகளுடன் மேலதிக நடவடிக்கைக்காக வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

### ஈழத்தின்...

புலோலியில் காலமானார்.

'மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன்...', 'நெஞ்சினில் நெருப் பேந்தி வாருங்கள்...' , 'கோணமலை எங்கள் ஏணைமலை...', 'போடு போடு வீரநடை போடு...' உட்படப் பல பாடல்களை இவர் எழுதியுள்ளார்.

1968ஆம் ஆண்டு முதல் மனிதரும் கடவுளும், கெரில்லாப் போர் விரகுகள், வேரடி வழித் தமிழ் சொற்பிறப்பியல் சிற்றகர முதலி, தமிழ்ப் பெயர் கையேடு மக்கட் பெயர் 46,000, அருகி வரும் பழந்தமிழ் பேச்சு வழக்கு சொற்பிறப்பியல் அகராதி எனப் பல நூல்களை அவர் எழுதியும் தொகுத்தும் வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி கவின் கலை கல்லூரியையும் இவர் நிறுவியிருந்தார்.

யாழ். வடமராட்சி – புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் பரந்தாமன் ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்குப் பெரும் பங்காற்றிய அவர் நீண்டகாலம் கிளிநொச்சியில் வாழ்ந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வடக்கு பொலிஸ்...

இந்த அநாமதேய தொலைபேசி அழைப்பு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே, வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இலங்கையுடனான வணிக உறவுகளை வலுப்படுத்த அவுஸ்திரேலியா திட்டம்

இலங்கையுடனான வணிக உறவுகளை வலுப்படுத்த அவுஸ்திரேலியாவின் விக்டோரியன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, தேயிலை, இறப்பர் மற்றும் ஆடைகள் போன்ற பாரம்பரிய ஏற்றுமதிகளுக்கு அப்பால் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மூலம் உறவை



விரிவுபடுத்துவது குறித்து இலங்கை அதிகாரிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என மெல்போர்னில் உள்ள இலங்கை உதவி உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

சந்தை அணுகல் மற்றும் மூலோபாய முயற்சிகள் மூலம் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

# பாடசாலை பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான மரங்கள் இருந்தால் உடன் அறிவிக்கவும்

பாடசாலை வளாகத்திற்குள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான மரங்கள் இருந்தால், அந்தந்த பிரதேச செயலாளர்கள் அல்லது மரக் கூட்டுத்தாபனத்துக்கு உடன் அறிவிக்குமாறு பாடசாலை அதிபர்களைப் பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன அறிவுறுத்தியுள்ளார்.

பலாங்கொடை ரஜவக்க வித்தியாலயத்தின் கட்டடமொன்றின் மீது மரமொன்று முறிந்து விழுந்த சம்பவம் குறித்து நேரில் ஆராய்வதற்குக் குறித்த பாடசாலைக்கு சென்றபோது பிரதியமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஆபத்தான மரங்கள் குறித்து பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் விரைவான மற்றும் பொறுப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

மேற்படி பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 17 வயதுடைய மாணவர் ஒருவன் உயிரிழந்ததுடன், மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

அதற்கமைய, இந்த சம்பவம் குறித்து முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.



# மருந்துகளுக்கான பற்றாக்குறை தொடர்பான குற்றச்சாட்டுக்கு சுகாதார அமைச்சு பதில்

அரசாங்கத்தின் மத்திய மருந்துக் களஞ்சியசாலைகளில் தற்போது 180 அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க இதனைத் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், இதற்கு பதிலளித்த பிரதி சுகாதார அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி, மருந்து விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள சிறிய குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டு சிலர் இதுபோன்ற தவறான கருத்துகளை வெளியிடுவதாகக் கூறினார்.

ஷஉயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கு பரிந்துரைக்கப்படும் மருந்துகள் போன்ற பொதுவான மருந்துகளுக்குப் பற்றாக்குறை இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷஇருப்பினும், விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள சில இடையூறுகள் சில மருந்துகளின் இருப்பை பாதித்துள்ளதாக ஒப்புக்கொண்ட அவர், இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும், இது சமீபத்திய பிரச்சினை அல்ல எனவும் பல ஆண்டுகளாக நீடித்து வரும் பிரச்சினை எனவும் அவர் குறிப்பிட்டார்.

2026 ஆம் ஆண்டுக்குள் மருந்து பற்றாக்குறையை முழுமையாகத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதி சுகாதார அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.



# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களை சந்தித்தது ஜே.வி.பியின் பிரதிநிதிகள் குழு

பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் குழு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின், மூத்த தலைவர்களை சந்தித்துள்ளனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

குய்சோ மாகாணத்தில் உள்ள சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

ஜே.வி.பி குழுவில் இளைஞர் விவகார துணை அமைச்சர் எரங்கா குணசேகர, தேசிய ஒற்றுமை துணை அமைச்சர் முனீர் முலாஃபர், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம். ஜெகதீஸ்வரன் உட்பட்டவர்கள் இடம்பெற்றிருந்தனர்.







நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முறைமை மாற்றம் எங்கே?

ஆட்சி முறைமையில் மாற்றங்களைக் கொண்டு வருவோம் என்று தெரிவித்து, அதன் அடிப்படையில் அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி எந்த மாற்றங்களையும் கொண்டு வரவில்லை என்பதை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டி இருக்கிறார்.

2022 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மிக மோசமான வீழ்ச்சியை அடுத்து தலைநகரில் வெடித்த அறகலய போராட்டம் தெற்கில் கிராமங்கள் வரைப் பரவியது. அந்த அறகலயப் போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடித் தப்ப வேண்டியவரானார். அந்த அறகலயப் போராட்டத்தின் எழுச்சிதான் நாடாளுமன்றத்தில் வெறுமனே மூன்றே மூன்று உறுப்பினர்களை மாத்திரம் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்திக்கு நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களையும் பெற்று தந்தது என்பது வெள்ளிடைமலை.

அறகலயப் போராட்டத்தின் ஒரே தீர்மானகரமான கோரிக்கையாக இருந்தது 'முறைமை மாற்றம்'தான். அந்த மக்கள் கோரிக்கையை - எழுச்சியை - பயன்படுத்தி, அந்த முறைமை மாற்றத்திற்கான உறுதிப்பாட்டோடு அதிகாரத்துக்கு வந்தது தேசிய மக்கள் சக்தி.

நாட்டில் முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தங்கள் பங்களிப்பாகவே மக்கள் ஒன்று சேர்ந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தியிடம் கொடுத்தார்கள்.

ஆனால் முறைமை மாற்றத்தை செய்வதாகக் கூறி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, ஆட்சி அதிகார முறைமை மாற்றத்திற்கான திட்டத்தையே தன்னுடைய ஆட்சிக் காலத்தின் அந்தத்துக்குந் தள்ளி வைப்பதாக அறிவித்து விட்டு, கிடைத்த அதிகாரத்தை ருசி பார்ப்பதில் ஈடுபாடு காட்டி நிற்கின்றது.

எந்த முறைமை மாற்றத்தையும் கடந்த ஆறு மாதத்தில் இந்த ஆட்சி தரப்பு செய்யவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தமது அறிக்கை மூலம் இப்போது விலாவாவாரியாகச் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

முன்னைய அரசுகள் - குறிப்பாக கடந்த ரணிலின் அரசு - எவற்றைச் செய்ததோ அதனைத்தான் அநுரகுமார திஸநாயக்கவின் தற்போதைய அரசும் தொடர்ந்து பின்பற்றுகின்றது என்பதை ஒவ்வொரு விடயமாக வரிசைப்படுத்திச் சுட்டிக் காட்டுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

உண்மையில் மக்களின் உடனடி எதிர்பார்ப்பான ஆட்சி முறைமை மாற்றத்தைத் தன்னுடைய பிரதான இலக்காகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டிருக்க வேண்டும். அதற்கான ஆணையைத்தான் மக்கள் இந்த அரசுக்கு கொடுத்திருந்தார்கள்.

ஆனால் ஆட்சி முறைமைக்கான மாற்றத்தை செய்யும் திட்டத்தை பின் தள்ளிப் போட்டுவிட்டது அநுரகுமாரவின் அரசாங்கம். அதன் மூலம் மக்கள் தனக்குப் பொறுப்பளித்த ஆணையை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உதாசீனம் செய்து நடக்கின்றார் என்ற குற்றச்சாட்டுக்கு இப்போது இலக்காகி இருக்கிறார். மறுக்க முடியாத, மறைக்க முடியாத குற்றச்சாட்டு இது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை முடிவுக்கு கொண்டு வருதல், நாட்டில் நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணும் விதத்திலான - எல்லாத் தரப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்குதல் என்பவை எல்லாம் ஓர் அரசின் ஆட்சி அதிகாரத்தின் முடிவின்போது செய்யக்கூடியவை அல்ல. அதிகாரத்துக்கு வந்தவுடன் அவற்றை ஆரம்பித்தால்தான் ஆட்சிக் காலம் முடிவுக்கு வர முன்னர் அதனைச் செய்து ஒப்பேற்றி முடிக்க முடியும்.

அந்த விடயங்களை அப்படியே அரசு தள்ளிப்போட்டு விட்டு நிற்பது, முறைமை மாற்றத்தை இந்த அரசு செய்து முடிக்க போவதில்லை என்பதை அப்பட்டமாகவே தெளிவுபடுத்தி விட்டது.

ஆட்சி அதிகாரத்தைத் தொடர்வதற்காகவும், அதன் மூலம் கிட்டும் வசதிகளையும் வாய்ப்புகளையும் தொடர்ந்து அனுபவித்து ருசிக்கவும், பதவி ஆசையை நிறைவு செய்யவும் மக்கள் வழங்கிய ஆணையை இந்த அரசு புறக்கணித்து விட்டது என்பதுதான் இதற்குள் புதைந்து கிடக்கும் உண்மை.



# ‘விஞ்ஞான வினாடி வினாப் புதிர்கள்’ நூல் வெளியீடு



யாழ். வடமராட்சி – பொலிகண்டியைச் சேர்ந்த வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர் செல்வன். சிவலிங்கம் சபேசனின் ‘விஞ்ஞான வினாடி வினாப் புதிர்கள்’ நூல் வெளியீடு அண்மையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி குணரட்ணம் கமலகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூல் ஆய்வுரையை விரிவுரையாளர் எஸ்.சுகுமார் ஆற்றினார்.

நூலாசிரியரான செல்வன். சிவலிங்கம் சபேசன் ஏற்புரையை வழங்கினார்.





# பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்தார் பிரான்ஸ் தூதுவர்

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட்க்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த கடந்த வியாழக் கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதமர், பிரெஞ்சு தூதுவர் ரெமி லம்பேர்ட்டை வரவேற்றதுடன், இலங்கைக்கும் பிரான்சுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பு குறித்து பாராட்டு தெரிவித்தார்.

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் குறித்து இந்த சந்திப்பின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இராஜதந்திர உறவுகள் துறையில் உள்ள அதிகாரிகளுக்கான பிரெஞ்சு மொழிப் பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் சிவில் சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தல் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் முக்கிய துறைகளில் பிரெஞ்சு அரசாங்கம் செய்துள்ள குறிப்பிடத்தக்க முதலீட்டிற்கும், இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு, குறிப்பாக பாரிஸ் கிளப் மூலம், பிரெஞ்சு அரசாங்கம் இலங்கைக்கு அளித்து வரும் தொடர்ச்சியான ஆதரவிற்கும் பிரதமர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார, கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் பிரெஞ்சு அரசாங்கத்தின் உறுதிப்பாடு மற்றும் ஆதரவை இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவர் லம்பேர்ட், மீண்டும் வலியுறுத்தினார்.





# இன்ஃப்ளுவென்ஸா உள்ள சிறுவர்களுக்கு இதய பாதிப்பு

இன்ஃப்ளுவென்ஸா தொற்று அறிகுறிகளைக் கொண்ட சிறுவர்கள், விளையாட்டு அல்லது கடுமையான உடல் செயல்பாடுகளில் ஈடுபட்டால், அவர்களுக்கு இதய பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக சிறுவர் நல மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் ஆலோசகர், தீபால் பெரேரா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.



எனவே, பெற்றோர்கள் இதுபோன்ற அறிகுறிகளைக் கொண்ட பிள்ளைகளை வீட்டிலேயே வைத்திருக்க வேண்டும் என்றும், அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கை முழுவதும், டெங்கு மற்றும் சிக்குன்குனியா பாதிப்புகள் அதிகரித்து வருவதுடன், சிறுவர்கள் மத்தியில் வயிற்றுப் போக்கும் பரவி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.



# தனித்துவமான சமையல் கலையைக் கொண்ட நாடாக பிரகாசிக்க வேண்டும்; பிரதமர் ஹரிணி

சுற்றுலாப் பயணிகளின் சுற்றுலாத் தலமாக மட்டுமல்லாமல், அனுபவங்களைத் தேடிச் செல்லும் உலகில், தனித்துவமான சமையல் கலையைக் கொண்ட நாடாக இன்னும் கவர்ச்சி-கரமானதாக மாற்ற நாம் பாடுபட வேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை சமையல் கலைஞர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட “சமையல் கலை உணவு கண்காட்சி 2025“ இன் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“உணவு என்பது வெறும் போசனைக்கான ஒரு வழிமுறையாக மட்டுமன்றி, ஒரு நாட்டின் கலாசாரம், அழகான நினைவுகள், சுதேச அடையாளம் மற்றும் உரிமைகளின் சக்திவாய்ந்த வெளிப்பாடாகவும் இருக்கும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். இலங்கை இயற்கை அழகால் மட்டுமன்றி, சுவையும் படைப்பாற்றலும் சிறந்து விளங்கும் இடமாக நாட்டை நிலைநிறுத்துவதில் சமையல் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும், சமையல் கலை உணவு கண்காட்சி இலங்கையின் தொழில்முறை சமையல்காரர்கள், பயிலுனர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் போட்டியிடுவதோடு மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ளவும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், வெளிநாடுகளைச் சேர்ந்த சமையல்காரர்களுடன் உறவுகளை உருவாக்கவும் ஒரு முக்கிய இடமாக மாறியுள்ளது. இது ஒரு கண்காட்சி என்பதைப் பார்க்கிலும் மேலானது, திறமை, பாரம்பரியம், ஒத்துழைப்பு மற்றும் உணவு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட எல்லையற்ற படைப்பாற்றலின் கொண்டாட்டமாக மாறியுள்ளது.” – என்றார்.




















# பட்டா ரக வாகனத்தில் மிகச் சூட்சுமமாக மரக்குற்றிகளை கடத்த முன்றவர் கைது

முக்கொம்பனில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்டவிரோதமாக – பெறுமதியான – காட்டு மரக்குற்றிகளை பட்டா ரக வாகனத்தில் மிக சூட்சுமமான முறையில் கடந்தி வந்த ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் கீழ் செயற்பட்டுவரும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் தடுப்பு பிரிவின் பொலிஸ் சார்ஜண்ட் கருணாரத்ன தலைமையிலான குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவல்களுக்கு அமைய நேற்றுக் காலை சங்குப்பிட்டி பகுதியில் வைத்து 2 லட்சம் ரூபா பெறுமதியான 45 பாலை மரக்குற்றிகளுடன் இந்த பட்டா கைப்பற்றப்பட்டது. விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர் கைது செய்யப்படும் போது சாரதியையும் வாகனத்தையும் விடுதலை செய்வதற்கு 3 லட்சம் ரூபா வரை பேரம் பேசப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வவுனியாவில் ஓட்டோக்களுக்கு மீட்டர் கருவி பூட்டும் செயற்பாடு











(கி.வசந்தன்)

வவுனியாவில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீட்டர் கருவி பூட்டும் செற்பாடு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். ரவீந்திரன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தில் ஓட்டோக்களுக்கு மீட்டர் பொருத்தமையினால் பாவனையாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு வவுனியாவில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீட்டர் பூட்டும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.


முதலாவது கிலோமீட்டருக்கு 130 ரூபாவும் இரண்டாவது மீட்டரில் இருந்து கிலோ மீட்டருக்கு 100 ரூபாவும் அறவிடுவதற்கான திட்டமும் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

# அப்பா எனும் பொழுது ஆண்டவனே தெரிகிறார் !

**(இன்று சர்வதேச ரீதியாக தந்தையர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.)**

அப்பா எனும் பொழுது
அன்பு தெரிகிறது
அப்பா எனும் பொழுது
கருணை தெரிகிறது
அப்பா எனும் பொழுது
ஆண்டவனே தெரிகிறார்
அப்பா எனும் வார்த்தை
அனைவர்க்கும் மந்திரமே !

அன்னையால் நாம் பிறந்தோம்
அப்பாதான் வேராவார்
அவரருகில் இல்லை என்றால்
அனைத்துமே அகன்றிடுமே
வழித் துணையும் அவரே
மருத்துவரும் அவரே
மா மருந்தாய் இருந்து
காத்திடுவார் அப்பா !



பெருமை கொள்வார் அப்பா
பிறந்ததுமே பார்த்து
மழலை குரல் கேட்டு
மயங்கிடுவார் அப்பா
உச்சி தொட்டுக் கொஞ்சி
உருகிடுவார் அப்பா
உள்ள வரம் அனைத்தும்
பிள்ளையென நினைப்பார் !

தன் முகத்தைப் பார்த்து
மழலையைப் பார்ப்பார்
தனை மறந்து அப்பா
மூழ்கிடுவார் மகிழ்வில்
இறை கொடுத்த வரமாய்
எண்ணிடுவார் அப்பா
இவ் உலகு அவர்க்கு
இன்பமாய் தெரியும் !

பிள்ளை மனம் அறிந்து
பேணிடுவார் அப்பா
உள்ளம் எலாம் பிள்ளை
நினைவுடனே இருப்பார்
அள்ள அள்ள குறையா
அன்பினையே கொடுப்பார்
அவர் என்றும் துணையாக
ஆகியே இருப்பார் !

கற்கின்ற கரு அதனை
கருத்திலே கொள்வார்
கல்வி கற்க வாழ்வினிலே
கண்ணாக இருப்பார்
தன் பிள்ளை ஆளுமையாய்
வரவெண்ணி உழைப்பார்
கற்றவர்கள் சபை அமரக்
காத்திருப்பார் அப்பா !

நல்லவனாய் வல்லவனாய் வர
அப்பா நினைப்பார்
எல்லையில்லாப் புகழ் பெறவே
எல்லாமே கொடுப்பார்
நல்ல பிள்ளை என்று
நாடெல்லாம் சொல்ல
நாமும் எண்ணி அப்பா
வாழ்ந்திடுவார் மண்ணில் !



- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ் மொழிக்கல்வி
இயக்குநர்,
மெல்பேண் - ஆஸ்திரேலியா)

# இன்று 93 ஆவது வயதில் காலடி வைக்கும் மூத்த தமிழ் அரசியல்வாதி ஆனந்தசங்கரி




- பா.சதீசன் -

மூத்த தமிழ் அரசியல்வாதியான வீரசிங்கம் ஆனந்தசங்கரி இன்று தமது 93 ஆவது வயதில் கால்பதிக்கின்றார்.

1933 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் பிறந்த ஆனந்தசங்கரி ஆரம்ப கல்வியை அச்சுவேலி அமெரிக்கன் மிசன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர்கல்வியை கொழும்பு ஸகீரா கல்லூரியிலும் பயின்றார்.

தொடர்ந்து கொழும்பு சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்றமையுன் ஆசிரியராகவும் சேவையாற்றினார். ஜா எல ருடல கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியர் சேவையை ஆரம்பித்த ஆனந்தசங்கரி தொடர்ந்து இரத்மலானை கொத்தலாவல பாடசாலையிலும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லரியிலும், பூநகரி மகாவித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் ஆங்கில பாட ஆசிரியராக சேவையாற்றினார்.

இலங்கையில் மூத்த தமிழ் அரசியல்வாதியாக உள்ள வீ.ஆனந்தசங்கரி தமிழ் அரசியலில் முக்கிய பங்கினை வகித்துள்ளார்.

1955 ஆம் ஆண்டு லங்கா சமசமாச கட்சியில் இணைந்து, அக்கட்சி சார்பில் கொழும்பு மாநகர சபையில் போட்டியிட்டு அரசியலுக்குள் பிரவேசித்தார். தொடர்ந்து அதே கட்சி சார்பில் 1960 ஆம் ஆண்டு கிளிநொச்சி தொகுதியை மையப்படுத்தி நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார். தொடர்ந்து 1965ம் ஆண்டு கிளிநொச்சி கிராம சபை தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதியானதுடன், கிராம சபைத் தலைவரானார்.

1966 மே மாதத்தில் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸுடன் இணைந்தார்.1968 ஆம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி பட்டண சபையின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970 இல் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணியின் தலைவரான ஆனந்தசங்கரி, 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஆலாலசுந்தரத்தை 657 வாக்குகளால் தோற்கடித்து நாடாளுமன்றம் சென்றார்.

இலங்கை அரசியல் வட்டத்தில் தமிழ்த் தேசிய பயணத்தின் ஊடாக தமிழ் மக்களிற்கான அரசியல் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் தமிழ்த் தேசிய அரசியல் பயணத்தை ஆரம்பித்த வீ.ஆனந்தசங்கரி இளைஞர்களை ஒன்று திரட்டி செயற்பட்டார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழலை கருத்தில் கொண்டு மூத்த தமிழ் அரசியல் தலைவர்களான தந்தை செல்வா, ஜீ ஜீ பொன்னம்பலம், சௌ.தொண்டமான் ஆகியோரின் இணைவுக்கான முயற்சிகள் இடம்பெறும்போது அதற்கு பலம் சேர்த்தார் ஆனந்தசங்கரி.

1972 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒரே குடையின் கீழ் கூடிய அப்போதைய தமிழ் அரசியல் தலைவர்களுடன் ஒருமைப்பாட்டுக்காக உழைத்த ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்தில் பங்காற்றினார். அத்துடன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது பிரசாரச் செயலாளராகவும் நியமிக்கப்பட்ட ஆனந்தசங்கரி பெருந் தலைவர்களுடன் இணைந்து தமிழ் அரசியலில் முக்கிய பங்காற்றினார்.

1977 நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு அன்றைய இலங்கை சுதந்திரக் கட்சியின் அமைச்சர் சி. குமாரசூரியரை 11,601 வாக்குகளால் தோற்கடித்தார்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் அழுத்தத்தாலும், தமிழ் ஈழத்துக்கு ஆதரிப்பதில்லை என நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கான ஆறாம் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கருப்பு ஜுலை வன்முறைகளில் 3,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அனைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை ஒன்றியொதுக்கல் செய்தார்கள்.

மூன்று மாதங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்காத நிலையில், 1983 அக்டோபர் 22 இல் வீரசிங்கம் ஆனந்தசங்கரி நாடாளுமன்ற இருக்கைகளை இழந்தார். ஆறாம் திருத்தச் சட்டத்துக்கு அமைய சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்ததை அடுத்து வழக்கறிஞராகப் பணியாற்றும் உரிமையும் இவருக்கு மறுக்கப்பட்டது.

பெரும் தலைவர்களின் மறைவின் பின்னர் கட்சியின் முக்கிய பொறுப்புக்களில் இருந்ததுடன், 2002 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக பொறுப்புக்களை ஏற்று கட்சியை வழிநடத்தி வந்தார்.

அக்காலப்பகுதியில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு தலைமை ஏற்றுச் செயற்பட்ட ஆனந்தசங்கரி, உட்கட்சி முரண்பாடுகளால் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபக காலம் முதல் இன்று வரை அக்கட்சியினை பாதுகாப்பதிலும், அரசியலிலும் ஈடுபட்டு வந்த ஆனந்தசங்கரி தனது 93 ஆவது வயதிலும் தொடர்ந்தும் அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றார்.

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தினால் சமரசம், அகிம்சை ஊக்குவிப்போருக்கான மதன்ஜித் சிங் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. காந்திய வழியில் அகிம்சை போராளியாக அரசியலில் வலம் வரும் ஆனந்தசங்கரி தனது முதிர் வயதிலும் தமிழ் மக்களின் உரிமைக்காக பல்வேறு வகையிலும் முயற்சித்தே வருகின்றார்.

1983 ஜுலைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வடக்கு நோக்கி வந்த மக்களை அரவணைத்து, கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களை உருவாக்கி அவர்களை குடியமர்த்த இளைஞர் அணிக்கு வழிகாட்டியாகவும் இருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றைய அரசியல் சூழலில் தன்னால் பாதுகாத்து வரப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்தை உணர்ந்து தமிழ் அரசியல் தலைவர்கள் ஒருமைப்பாட்டுக்குள் ஒரே கட்சியின் கீழ் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்ற அழைப்பினையும் அவர் விடுக்கத் தவறவில்லை.

இன்று 93ஆவது வயதில் முதிர்ந்த அரசியல்வாதியாக காலடிவைக்கும் ஆனந்தசங்கரிக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். தமிழ் அரசியல் சூழலில் மீண்டும் ஒருநிலையுடனான பயணத்துக்குள் கடந்து செல்ல தமிழ் தலைமைகள் முன்வர வேண்டும் என்பதே ஆனந்தசங்கரியின் விருப்பமுமாகும். தனது காலத்தில் அரசியல் தீர்வு ஒன்றை தமிழ் மக்களிற்கு பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இவரது முதிர்நத அரசியல் சிந்தனை, செயற்பாடுகளில் காண முடிகின்றது.

# அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து: பலி எண்ணிக்கை 270 ஆக அதிகரிப்பு



அகமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து, மேலும் ஒரு உடல் விமானத்தின் வால் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளது.

பிஜி மருத்துவக் கல்லூரியில், இளநிலை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் தவால் கமேட்டி நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களை சந்திக்கையில், “இன்றைய நிலவரப்படி விமான விபத்துப் பகுதியிலிருந்து 270 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.” என்று தெரிவித்தார்.

மேலும், விமான விபத்து நடந்த இடத்தில் தடயங்களைத் தேடும் பணியில் தடயவியல் நிபுணர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கடந்த வியாழக் கிழமை ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானது சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டுமே உயிர்பிழைத்தார். மருத்துவக் கல்லூரி விடுதி கட்டடத்தின் மீது அந்த விமானம் வெடித்துச் சிதறி தீப்பிடித்தது.

இந்த பயங்கரமான விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேரும், மருத்துவக் கல்லூரி விடுதிக்கட்டிடத்தில் இருந்த மருத்துவ மாணவர்கள் மற்றும் அந்த மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இருந்தவர்கள் உட்பட 270 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் கூறுகிறது.

இந்நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. உறவினர்களிடமிருந்து டி.என்.ஏ. மாதிரிகள் சேகரிக்கப்படுகிறது. ஏர் இந்தியா விமான விபத்து நடந்த இடத்தில், மீட்புப் பணிகளுக்காக என்.எஸ்.ஜி. குழு நிறுத்தப்பட்டுள்ளது.

விமான விபத்து புலனாய்வுப் பணியகம், சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம், அகமதாபாத் குற்றப்பிரிவு மற்றும் உள்ளூர் காவல்துறை உட்பட பலரும் விபத்து குறித்து பல கட்ட விசாரணையை நடத்தி வருகின்றன.

தேசிய புலனாய்வு அமைப்பின் அதிகாரிகளும் வெள்ளிக்கிழமை சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.

இந்நிலையில், விமான விபத்து நடந்த இடத்தில் இருந்து, மேலும் ஒரு உடல் விமானத்தின் வால் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து, பலி எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளது.

மீட்கப்பட்ட சடலங்கள் குறித்து அதிகாரிகள் பேசும்போது, விபத்துக்குள்ளான இடத்தில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்களின் டி.என்.ஏ. பகுப்பாய்வு கணிசமாக துரிதப்படுத்தப்படும் எனவும் மூன்று நாட்களுக்குள் அவற்றை அடையாளம் காணும் பணிகள் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

# அகமதாபாத் விமான விபத்து விசாரணைக்கு 3 மாதங்கள் அவகாசம் தேவை; மத்திய அரசு



“அகமதாபாத் விமான விபத்து குறித்த விசாரணைக்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்துறைச் செயலாளர் தலைவராக இருப்பார். இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாத காலம் அவகாசம் வழங்கப்படும்.”

– இவ்வாறு சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்

இது குறித்து நேற்று செய்தியாளர்களை சந்தித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு,

“கடந்த இரண்டு நாட்கள் மிகவும் கடினமாக இருந்தன. குறிப்பாக அமைச்சகத்துக்கும், மற்ற அனைவருக்கும் மிகவும் கடினமான சூழல் இருந்தது. அகமதாபாத்தில் நடந்த சம்பவம் முழு நாட்டையும் உலுக்கியுள்ளது. சம்பவத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் என் தந்தையையும் ஒரு சாலை விபத்தில் இழந்து விட்டேன். எனவே ஓரளவுக்கு, குடும்ப உறுப்பினர்கள் உணரும் வலியையும் வேதனையையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

சம்பவம் குறித்து எங்களுக்குத் தெரிந்தவுடன் அது ஓர் அதிர்ச்சியான தருணம், ஆனால், அந்த அவநம்பிக்கையிலும் கூட, என்ன செய்ய வேண்டும், என்ன ஆதரவு தேவை என்பதை மேற்பார்வையிட நான் தனிப்பட்ட முறையில் சம்பவ இடத்துக்கு விரைந்தேன். நாங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தபோது, குஜராத் அரசு ஏற்கெனவே மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தது.

நம்மிடம் உறுதியான பாதுகாப்புத் தரநிலைகள் உள்ளன. வலுவான நெறிமுறைகள் நாட்டில் உள்ளன. பாதுகாப்பை மேம்படுத்த நாங்கள் அனைத்தையும் செய்வோம். ஏற்கெனவே நமது பாதுகாப்பு அமைப்பு வலுவானது. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களை குடும்பங்களிடம் ஒப்படைக்க டிஎன்ஏ சோதனை நடந்து வருகிறது. தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள கறுப்புப் பெட்டியை டிகோட் செய்வது விபத்து குறித்த ஆழமான நுண்ணறிவை வழங்கும். கறுப்புப் பெட்டியை டிகோட் செய்வதன் மூலம் விமான விபத்துக்கு சில நிமிடங்களுக்கு முன்பு என்ன நடந்தது என்பது பற்றி அறிய முடியும்.

இந்த விமான விபத்து குறித்த விசாரணைக்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்துறைச் செயலாளர் தலைவராக இருப்பார். இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்க மூன்று மாதம் கால அவகாசம் வழங்கப்படும். அகமதாபாத் விமான விபத்தை அமைச்சகம் மிகுந்த தீவிரத்துடன் எடுத்துக்கொள்கிறது. நிலைமையை ஆய்வு செய்ய விமான விபத்து புலனாய்வுப் பணியக இயக்குநர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தார். விமான விபத்து குறித்த தகவல்கள் புலனாய்வுப் பிரிவால் உடனடியாகத் திரட்டப்பட்டது.” என்றார்.

# இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸூக்கு தாக்குதல் நடத்துவோம்; ஈரான் எச்சரிக்கை



இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலைப் பாதுகாத்தால், மேற்படி நாடுகளில் தாக்குதல் நடத்துவோம் என ஈரான் எச்சரித்துள்ளது.

மேற்படி நாடுகளை ஈரான் எச்சரித்துள்ளதாக ஈரானிய அரசு ஊடகங்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று நாடுகளும் இஸ்ரேலுக்கு ஆதரவளித்தால், அந்த நாடுகளில் உள்ள இராணுவ தளங்கள் மற்றும் கப்பல்களை ஈரான் குறிவைக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈரான் ஏவுகணை வீசினால் தெஹ்ரான் பற்றி எரியும்

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை



தெஹ்ரானிலுள்ள குடியிருப்பு கட்டடமொன்றின் மீது நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 20 சிறுவர்கள் உட்பட 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஈரானிய அரச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், அணுசக்தி நிலையங்கள் உட்பட ஈரானிய இராணுவ தளங்களையே குறிவைத்ததாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒன்பது ஈரானிய அணு விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் தங்களது தாக்குதலில் பலியானதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, தெஹ்ரான் மீதான பழிவாங்கும் தாக்குதல்களில் இஸ்ரேலுக்கு உதவ வேண்டாம் என அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளை ஈரான் கோரியுள்ளது.

மேற்படி மூன்று நாடுகளும் இஸ்ரேலுக்கு ஆதரவளித்தால், அந்த நாடுகளின் இராணுவ தளங்கள் மற்றும் கப்பல்கள் இலக்கு வைக்கப்படும் எனவும் ஈரான் எச்சரித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலில் ஈரான் நடத்திய பதிலடித் தாக்குதல்களில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, ஈரான் தொடர்ந்து ஏவுகணைகளை ஏவினால் தெஹ்ரான் பற்றி எரியும் என இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் எச்சரித்துள்ளார்.

# கடந்த வருடம் பிரித்தானியாவிற்குச் சென்ற அகதிகளில் அதிகமானோர் பாகிஸ்தானியர்கள்



கடந்த வருடம் பிரித்தானியாவிற்கு சென்ற அகதிகளில் அதிகமானோர் பாகிஸ்தானியர்கள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் அதற்கு முந்தைய ஆண்டுகளில், அதிக எண்ணிக்கையிலான ஏதிலிகள் ஆப்கானிஸ்தானிலிருந்தும், சிரியாவிலிருந்தும் பிரித்தானியாவுக்குள் வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரித்தானிய அரசாங்கம் தற்போது புகலிட விண்ணப்பங்கள் குறித்து கடுமையான முடிவுகளை எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 15.06.2025

## மேஷம்

தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்றுவீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நேர்மறையான கண்ணோட்டம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும்போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதியான போக்கு நல்ல பலன் தரும்.

## கடகம்

பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில் திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காணபிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும்.மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சி யடைவீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. நேர்மையாக பணியாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

உங்களிடம் தேவையற்ற கவலைகள் காணப்படும்.

## துலாம்

இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். திட்டமிட்ட முயற்சியும் செயல்களில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக்குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலானதாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதற்றம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.06.2025




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப் படும். எந்த விஷயத்தையும் யதார்த்த மாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர் பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப் படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன் கள் தருவதைக் காண்பீர்கள். சம நிலையோடு இருந்தால் சரியான முடி வெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டை உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப் படும். எந்த விஷயத்தையும் யதார்த்த மாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர் பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப் படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.



# மறு அறிவித்தல் வரை இஸ்ரேலுக்குச் செல்வதை தவிர்க்குமாறு இலங்கைத் தூதுவர் அறிவிப்பு

மறு அறிவித்தல் வரை மீண்டும் இஸ்ரேலுக்குப் பயணிப்பதைத் தவிர்க்குமாறு இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார இலங்கையர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலில் இருந்து இலங்கைக்கு பயணிக்கும் இலங்கையர்களுக்காக இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இஸ்ரேலில் அனைத்து அலுவலகங்கள் மற்றும் பணியிடங்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் எவரேனுமொரு தரப்பினரால் மேற்கொள்ளப்படக்கூடிய தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு பாதுகாப்பு மறைவிடங்களை அண்மித்து தங்கியிருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர நிலைமைகளில் இலங்கையர்கள் 24 மணித்தியாலமும் இயங்கும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தூதரகத்துடன் அழைப்பை ஏற்படுத்தி தொடர்பு கொள்ள முடியுமெனவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.